விழிகளை மூடிக் குழிகளில் உறங்கும்
வீரக் குழந்தைகளே 2 நாங்கள்
விடுதலை வென்றிட குழிகளை விட்டு
வெளியினில் வாருங்கள் நீங்கள்
வெளியினில் வாருங்கள்

விழிகளை மூடிக் குழிகளில் உறங்கும்

உயிரினைக் கொடுத்து உறவினைக் காத்த உங்களை மறப்போமா
உறங்கியே வாழும் உங்களை மறந்த மனிதராய் இருப்போமா 2

விழிகளை மூடிக் குழிகளில் உறங்கும்

மானம் அழிவின்றி வாழவே உயிரைத் தானம் செய்தீரே 2
இந்த வானமே போற்றும் வையகம் வாழ்த்தும் என்றுமே வாழ்ந்தீரே 2

விழிகளை மூடிக் குழிகளில் உறங்கும்

நள்ளிரா வேளையில் கல்லறை தேடியே நாம் உம்மை வணங்குகிறோம்
அங்கு நெய்விளக்குகேற்றியே தமிழர் நம் வாழ்வினில் போற்றியே தொழுகின்றோம் 2

விழிகளை மூடிக் குழிகளில் உறங்கும்